# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

## MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபீஸ் எதிரில், K புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- |
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி :

பெறுநர்

K. மகாலெட்சுமி,
வழக்கறிஞர்/ நீதிமன்ற கமிஷனர்,
3/332 அய்யனன் நகர் 4வது தெரு,
யா. ஒத்தக்கடை,
மதுரை-625107.
தொலைபேசி எண்.8122722191

ஐயா,

பொருள் : தங்களின் WP. No.19890 மற்றும் WP (MD) No.4533-ன் படி தாங்கள் கோரியுள்ள விவரங்கள் சம்மந்தமாக.

---------

தாங்கள் எங்களிடம் கோறியுள்ள எங்களது உறுப்பினர்களின் 2018-ம் வருட மார்ச் மாதம் சோதனை செய்து சான்றிதழ் வழங்கிய எண்ணிக்கையின் நகல், சோதனை மையத்தின் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் மற்றும் சோதனை செய்யும் கருவியின் 6 மாத (Calibration Certificate) காலிபரேசன் சர்டிபிகேட்டையும் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளோம்.

மற்றும் நீதிமன்றத்தின் தகவலின்படி தற்பொழுது 317 மையங்கள் இயங்குவதாக தெரிய வந்தள்ளது ஆனால், தற்பொழுது வாகனங்கள் புகை சோதனைக்கு வராததாலும் வருவாய் இல்லாததாலும் தற்பொழுது சுமார் 250 மையங்கள் மட்டும் இயங்கி வருகின்றன. தகுதி சான்றிதழ் மட்டும் பெறும் வாகனங்கள்தான் புகை சோதனைக்கு வருகின்றது இது மொத்த சதவிகிதத்தில் 15% வண்டிகள் மட்டும்தான் வருகின்றது. மீதமுள்ள 85% சதவிகிதத்தில் சொந்த தனியார் வாகனங்கள் இரு சக்கர வாகனங்கள் சோதனை செய்து சான்றிதழ் வாங்க வருவதில்லை.

Lr. No.77915/C3/06 Dt. 2.1.2007
Circular No.01/07

மேற்கூறிய G.O. போட்டும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் சரிவர நடைமுறை படுத்தவில்லை.

G.O. Ms. No.1579 dated 24.11.2008
G.O. Ms. No.812 Home dated 29.05.1997
From the Principal Secretary and Transport Commissioner, Chennai,
LetterNo.14992/C3/2002 dated 10.02.2003 and 16.02.2007.

ஆணையின்படியும் சாலையில் சோதனை செய்து அபராதம் விதிப்பதும் இதுவரை பின்பற்றப்படவில்லை ஆகவே எங்களுக்கு எந்த விதமான வாகனங்களும் புகை பரிசோதனைக்கும் வருவது இல்லை. எங்களுடைய வாழ்வாதாரம் மொத்தமாக நலிவடைந்துள்ளது. ஆகவே எங்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கும் இச்சோதனை மையங்களை வாழ்விக்க வேண்டுமாக தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**எங்களது புகை சோதனை கட்டணம்**

G.O. Ms. No.674 dated 03.06.1998
G.O.Ms. No.1495 Home dated 14.10.1997

மேற்கூறிய G.O. படி 20 ஆண்டுகளாக G.O. படி உண்டான கட்டணத்தை வசூலித்து வருகின்றோம். சோதனை சான்றிதழ் கட்டணத்தை உயர்த்தி தரும்படி அரசிடம் பலமுறை கேட்டும் இதுநாள் வரை உயர்த்தி தரவில்லை என்பதையும் தங்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆகவே, சான்றிதழ் கட்டணத்தை உயர்த்தி எங்களுக்கு ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: மதுரை
தேதி: 11.05.2018

தலைவர்.

**இணைப்பு:**

1. 10 மையங்களின் சான்றிதழ்கள்
2. Lr. No.77915/C3/06 dt. 2.1.2007 Circular No.01/07
3. G.O. Ms. No. 1579 dated 24.01.2008
4. G.O. Ms. No.674 dated 03.06.1998